DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 3 of 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW.1- (L.W- 1)** |
| **Name** | **:** | **திரு. பால்துரை** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**28.11.2022**

**முதல் விசாரணை**

நான் மேலே கண்ட முகவரியில் வசிக்கிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் 3 பேரை தெரியும். 1-ம் எதிரி எனது மாமனார். 2-வது எதிரி எனது மைத்துனன். 4-வது எதிரி 1-ம் எதிரியின் வீட்டு பக்கத்தில் வசிப்பவர். 4-ம் எதிரியை எனக்கு ஏற்கனவே தெரியும். 3-ம் எதிரி கனகராஜ் இறந்துவிட்டார் என்று தெரிந்து கொண்டேன். நானும், எனது மனைவி தமிழ்செல்வியும் வாடகை வீட்டில் மஞ்சனசொல்லியில் உள்ள அன்பு அண்ணா காலனியில் வாடகை வீட்டில் குடியிருந்தோம். நாங்கள் வாடகை வீட்டில் இருப்பதனால் 1-ம் எதிரியான மாமனார் கருணாநிதி காலனி மஞ்சனக்கொல்லியில் 1-ம் எதிரி வீட்டுக்கு பக்கத்தில உள்ள புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியிருப்பதை சொன்னார். அவர் சொன்ன இடத்தில் ஒரு செட்டை போட்டேன். அதற்கு 2-ம் எதிரியும் உதவி புரிந்தார். செப்டம்பர் 2017 அன்று அந்த செட் போடும் வேலையை ஆரம்பித்தேன். மின்சார இணைப்பு

பெறவும் மற்ற அரசு அனுமதி பெறவும் 1-ம் எதிரி தடையில்லா சான்று கொடுத்தார், அதன் அடிப்படையில் 1-ம் எதிரியின் வீட்டில் புது ஒயர்களை மாற்றி அதில் இருந்து நான் கட்டிய செட்டிற்கு இணைப்பு கொடுத்தேன். பின்னர் நான் அந்த செட்டை கட்டி முடித்துவிட்டு அந்த இடத்தில் குடிபுகுந்தேன். எனக்கு 3 ஆண் குழந்தைகள் உள்ளனர்.

கடந்த 03.10.2017 அன்று காலை 6 மணிக்கு 1-ம் எதிரி நான் வீடடு வாசலில் இருந்தபோது என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று ஏதேதோ தகாத வார்த்தை பேசி என்னிடம் தகராறுக்கு வந்தார். 1-ம் எதிரி திடீரென்று அவர் வீட்டில் புகுந்து கோடாரி எடுத்து கொண்டு வந்து என் தலையில் வெட்டினார். தலையில் எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. அந்தநேரதத்தில் 2-ம் எதிரி அவருடைய வீட்டில் இருந்து கத்தியை எடுத்து வந்தார், கத்தியால் 2-ம் எதிரி என்னை தலையில் வெட்டினார் மீண்டும் 1-ம் எதிரி அந்த கத்தியை பிடுங்கி எனது தலையில வெட்டினார். 2-ம் எதிரி எனது வலது பக்க தோள்பட்டையில் வெட்டினார், முதுகிலும் காயம் ஏற்பட்டது. பக்கத்தில் இருந்த 3-ம் எதிரி கனகராஜ் 1-ம் எதிரியிடம் இருந்த கோடாரியை பிடுங்கி வெட்ட வந்தார். அதை நான் தடுத்து விட்டேன். 3-ம் எதிரி கனகராஜ் மகன் 4-ம் எதிரி நாகராஜ் இரும்பு ராடை எங்கேயோ எடுத்து வந்து எனது முதுகில் அடித்தார். அதனால் முதுகில் வீக்கம் வந்தது. எனது மனைவி என்னை வந்து காப்பாற்றினார் அவருக்கு ஒரு அடிபட்டது, குழந்தைகளும் என்னை வந்து காப்பாற்றினார்கள். பின்னர் நான் கட்டிய செட்டை மேற்படி கத்தி, கோடாரி, இரும்புராடால் சேததபபடுததினார்கள் என் மனைவி சத்தம்போட்டதால் அக்கம் பக்கத்தில் இருந்த ஊர் பொதுமக்கள் ஒன்று கூடினர். பின் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டனர். பின்னர் ஆமபுலன்ஸ் மூலம ஊட்டி அரசு மருத்துவமனைக்கு ஊர்காரர்கள் என்னை அழைத்து வந்து சேர்த்தனர். தலையில் தையல் போட்டார்கள் தோள்பட்டையில் மருந்து போட்டார்கள், முதுகில் கண்ட வீக்கத்திற்கு மருந்து எதுவும போடவில்லை, மயக்க மருந்து வாந்தி எடுத்ததால் பின்னர் கோவை அரசு மருத்துவமனைக்கு என்னை அனுப்பினார்கள். அங்கு

எனக்கு ஸ்கேன் எடுத்தார்கள். அதில் எனக்கு முதுகில் எலும்பு முறிவு இருந்ததாக சொன்னார்கள். தோளில் பட்ட காயத்திற்கு மருந்து போட்டு நிவர்த்தி செய்தார்கள் மீண்டும் தலையில் தையல் போட்டார்கள் மருத்துவமனையில் 5 நாள் உள்நோயாளியாக மருத்தவம் பார்த்தேன். சம்பவத்தன்று காலை 8 மணிக்கு போலிசார் ஊட்டி அரசு மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். எனக்கு எழுதப்படிக்க தெரியும். புகாரை போலிசார் எழுதினார்கள், என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆகும். மேற்படி எனது செட்டின் சேதமதிப்பு ரூபாய் 3000 ஆகும். வழக்கில கண்ட பொருட்களை சாடசியிடம் காட்டி வினவியபோது 1-ம் எதிரி பயன்படுத்திய கோடாரி மற்றும வெட்டுக்கத்தியையும், 2-ம் எதிரி பயன்படுத்திய அதே வெட்டுக் கத்தியையும். 4-ம் எதிரி பயன்படுத்திய இருமபி ராடையும் காட்டி வினவியபோது சாட்சி அதை ஒத்துக்கொள்வதால் அவை முறையே சாபொ1, சாபொ2, சாபொ3-ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நான் ஊட்டியில் வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். என்னுடைய செட் சேதமாகியதை போலிசிரர் போட்டோ எடுத்தார்கள், வழக்கில தாக்கல் செய்யப்பட்டுளள 3 போட்டோக்கள் என்னுடைய வீடு சம்மந்தப்பட்டது. அது அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் நடந்த உடன் எனது மனைவி உயிருக்கு பயந்து நான் ஏற்கனவே இருந்த வீட்டிற்கு சென்று விட்டார், மருத்துவமனையில் இருந்து நான் வந்தபின் மீண்டும் நான் எனது பழைய வீட்டிற்கு சென்றேன். 1-ம் எதிரியின் வீட்டிற்கு அருகில் மீண்டும் செல்லாததற்கு காரணம் உயிர் பயம்தான். 1-ம் எதிரி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கோடாரியில் வெட்டினார் 2-ம் எதிரி கோபமாக பேசினார் அது எனக்க புரியவில்லை, இறந்துபோன 3-ம் எதிரி இஙகிருந்து ஓடி விடு என்று கோபமாக என்னை விரட்டினார் 4-ம் எதிரி இரும்பு ராடா அடித்தார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் கண்ட நான்கு பேரும் என்னை அடித்தார்கள். சம்பவம் நடந்த

இடம் என் மாமானருக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல, புறம்போக்கு இடம் அதற்கான வரியை செலுத்தி அவர் அங்கு வசித்து வருகிறார். என்னுடைய மாமனார் வீட்டின் கதவிலக்க எண் எனக்கு தெரியவில்லை. நான் எனது பெற்றோர்கள் மற்றும சகோதரர் வசிக்கும் இடம் அன்பு அண்ணா காலனி. கருணாநிதி காலனிக்கும், அன்பு காலனிக்கும் சுமார் 1 கிமீ தூரம் இருக்கும். அன்பு அண்ணா காலனியில் எங்கள் வீடு சுடுகாடு அருகில் உள்ளது. 25.09.2017-ல் எனது மாமனார் வீட்டில் நான் உள்ளே உட்கார்ந்து கொண்டு மாமனாரை வீட்டுக்குள் விடமாட்டேன் என்றும் அந்த வீட்டை எனக்கு கொடுக்கவேண்டும் என்று எனது மாமனார் லலவ்டேல் காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

போலிசார் என்னை விசாரித்தபோது எனது மாமனாரின் அனுமதியின்பேரில் என் மாமனாருக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு இடத்தில் நான் செட்டு போட்டேன் என்று சொன்னேன். நான் போட்ட செட்டுக்கு கீழே ஒரு ரூம் உள்ளது. எனக்கு வீடுகட்ட மாமனார் அவர் வீடடு பக்கத்தில் இடம் கொடுக்கவில்லை என்றும் எனது மாமனார் வீட்டு மராமத்து பணி செய்தார் என்றும் அந்த நேரத்தில் எனது மனைவிக்கு வீடு கொடுக்கவேண்டும் என்று நான்தான் என் மாமனார் வீட்டுக்கு சென்று தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. 03.10.2017-க்கு முன்பு நானும் எனது மனைவியும் 1-ம் எதிரியின் வீட்டில் பாகம் வேண்டும் என்று தகராறு செய்தோம் என்றால் சரியல்ல.

(நீதிமன்ற நேரம் கருதி வழக்கு விசாரணை 05.45 மணிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/. Dr. P. Murugan,
District Judge, Udhgamandalam